மட்டுமே இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அதை எவ்வளவு சீக்கிரமாக சீரமைக்கச் செய்ய வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் செய்யப்படும்.

[முற்பகல் 9–20]

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுகிற போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடிய சீக்கிரத்தில்.

செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம்.

* வினா எண். 385— திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யார் தொகுதியில் உள்ள கொருக்காத்தூர் என்ற ஊருக்கும் ஆற்காடு தொகுதியில் உள்ள வாழைப் பந்தல் என்ற ஊருக்கும் இடையே ஓடும் செய்யாற்றில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது துவங்கப் பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, கொருக்காத்தூர், வாழைப்பந்தலுக்கு இடையிலே உள்ள பாலத்திற்கு மதிப்பீட்டுத் தொகை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னாலே மதிப்பிடப்பட்டு ஏதோ ஒரு காரணத்தாலே நிறுத்தப் பட்டதாக அறிகிறேன். அந்தத் தகவல் அரசாங்கத்திற்கு அல்லது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணி அரசின் அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டதிலேயும் இடம்

பெறவில்லை. வரும் ஆண்டுகளிலே மாநில அரசின சாலை கள் திட்டத்தின் கீழ் நிதிநிலைமையைப் பொறுத்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை கிராமங்களுக்கு எத்தனை பொதுமக்களுக்கு போக்கு வரத்து வசதி கிடைக்கும் என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற குறிப் புகள் என்னிடத்திலே இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, கொருக்காத் தூர் பகுதியிலே ஒன்றியங்களைச் சேர்ந்த பல கிராமங்கள் இருப்பதாலும் தலைமையிடமாக உள்ள வாழைப்பந்தலுக்கு பல அலுவல்கள் காரணமாக போகிறவர்களுக்கு பஸ் விட தடையாக இருப்பதாலும் அதற்கு தரைப்பாலமாவது கட்டுகிற நிலையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தரைப்பாலம் கட்டுவதைவிட மேல்மட்டப் பாலமாகக் கட்டு வதுதான் சிறந்தது. ஏனென்றால் வெள்ளக் காலங்களில் மக்கள் போகமுடியாத நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே தரைமட்டப் பாலங்களை விட மேல்மட்டப் பாலங்களைக் கட்டுவதற்கான திட்டங்களைத்தான் நாம் தீட்டுகிறோம். செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டுகிற வேலை எவ்வளவு சீக்கிரத்திலே முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

நார்த்தாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையம்.

*வினா எண். 386—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா;

(அ) வட ஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் தொகுதி யில் உள்ள நார்த்தாம்பூண்டி அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் டாக்டர் நியமனம் செய்யப் படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

(இ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS